# அலகு – 2

## TT0202 தமிழ்ச்சொற்கள் அமைப்பும் வகையும்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

எழுத்துகளால் ஆன சொற்களின் அமைப்பையும், அதன் இயல்பையும் விளக்கும் இலக்கணத்தில் சொற்கள், வேற்றுமை உருபு, பதம், தொடர் அமைப்பு குறித்து இவ்வலகு விளக்குகிறது.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- நால்வகைச் சொற்களைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.
- வேற்றுமை உருபுகளைப் புரிந்து கொள்ளலாம்.
- பகுப்பதம், பகாம்பதப் பொருளை அறிந்து கொள்ளலாம்.
- தொகைநிலை, தொகாநிலைத் தொடர்களை உணர்ந்து கொள்ளலாம்.
- துணை வினை, கூட்டு வினைச் சொற்களைப் புரிந்து கொள்ளலாம்.

## பாட அமைப்பு


| | |
|---|---|
| **2.0** | **பாட முன்னுரை** |
| **2.1** | **நால்வகைச்சொற்கள்** |
| 2.1.1 | இலக்கியவகைச் சொற்கள் |
| 2.1.2 | இலக்கண வகைச் சொற்கள் |
| **2.2** | **வேற்றுமை உருபுகள்** |
| 2.2.1 | முதல் வேற்றுமை |
| 2.2.2 | இரண்டாம் வேற்றுமை |
| 2.2.3 | மூன்றாம் வேற்றுமை |
| 2.2.4 | நான்காம் வேற்றுமை |
| 2.2.5 | ஐந்தாம் வேற்றுமை |
| 2.2.6 | ஆறாம் வேற்றுமை |
| 2.2.7 | ஏழாம் வேற்றுமை |
| 2.2.8 | எட்டாம் வேற்றுமை |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **2.3** | **பதம் வகைகள் (பகுபதம், பகாப்பதம்)** |
| 2.3.1 | பகுப்பதம் |
| 2.3.2 | பகாப்பதம் |
| 2.3.3 | எழுத்துப்பேறு |
| **2.4** | **தொடர்வகை : தொகைநிலை, தொகாநிலை** |
| 2.4.1 | தொகைநிலைத் தொடர்கள் |
| 2.4.2 | தொகா நிலைத்தொடர் |
| **2.5** | **துணைவினைகளும் கூட்டு வினைகளும்** |
| 2.5.1 | துணைவினைகள் |
| 2.5.2 | தனிவினையும் கூட்டுவினையும் |
| **2.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 2.1 நால்வகைச் சொற்கள்

### நால்வகைச் சொற்கள்

இலக்கியவகைச் சொற்கள், இலக்கணவகைச் சொற்கள் எனச் சொற்கள் இருவகைப்படும்.

### 2.1.1 இலக்கியவகைச் சொற்கள்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என இலக்கியவகைச் சொற்கள் நான்கு வகைப்படும்.

- **இயற்சொல்**

படித்தவர், படிக்காதவர் என்னும் பாகுபாடின்றி அனைவராலும் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய சொல் **இயற்சொல்** ஆகும். 'பூ', 'யானை', 'நாய்', 'மாடு' முதலான சொற்கள் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை. ஆதலால் இயற்சொற்களாயின. இயற்சொல் – இயல்பான சொல்.

பெயர் இயற்சொல், வினை இயற்சொல் என இயற்சொற்கள் இருவகைப்படும்.

எளிதில் பொருள் உணர்த்தும் பெயர்ச்சொற்கள் பெயர் இயற்சொல் எனப்படும்.

**எ.கா:**

சூரியன், நிலவு, காற்று, தீ.

இவை போன்ற இயற்சொற்கள் பெயர்ச்சொற்கள் ஆதலால், இவை பெயர் இயற்சொற்களாயின.

எளிதில் பொருள் உணருமாறு அமைந்துள்ள வினைச்சொற்கள் வினை இயற்சொல் எனப்படும்.

**எ.கா:**

படி, வா, பாடி, பற.

இவை போன்றன இயற்சொற்கள் வினைச்சொற்கள் ஆதலால் இவை வினை இயற்சொற்களாயின.

- **திரிசொல்**

கற்றவர்கள் மட்டும் புரிந்து கொள்ளக் கூடிய சொல் **திரிசொல்** எனப்படும். 'கடல்' என்பது அனைவருக்கும் விளங்கும் சொல் ஆகும். ஆனால், கடலைக் குறிக்கும் 'ஆழி' என்னும் சொல் படித்தவர்களுக்கு மட்டுமே தெரியும். மேலும், சில எடுத்துக்காட்டுகள்,

காற்று – வளி
நகம் – உகிர்
மயில்தோகை – பீலி
கிளி – தத்தை
நீர் – புனல்
உலகம் – ஞாலம்
உரைத்தான் – செப்பினான்

திரிசொல் இருவகைப்படும். அவை, 1) பெயர்த்திரிசொல், 2) வினைத் திரிசொல்.

### பெயர்த்திரிசொல்

கற்றவர்க்கு மட்டுமே பொருள் விளங்குமாறு அமைந்த பெயர்ச்சொல் '**பெயர்த்திரிசொல்**' ஆகும். சில எடுத்துக்காட்டுகள்,

எயில் – மதில்
நல்குரவு – வறுமை
கழை – மூங்கில்
கிழமை – உரிமை
மடி – சோம்பல்

பெயர்த்திரிசொல் இருவகைப்படும். அவை,
i. ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்
ii. பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்

**ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்**

வேழம், வாரணம், கழை ஆகிய சொற்கள் "யானை" என்னும் ஒரே பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு கற்றவர்க்கு மட்டுமே பொருள் விளங்குமாறு அமைந்து ஒரே பொருளை உணர்த்தும் பல சொற்களை **ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்** என்று அழைக்கிறோம்.

**பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்**

ஆவி இச்சொல் உயிர், பேய், மெல்லிய புகை ஆகிய பல பொருள்களை உணர்த்துகின்றன. அரிதில் பொருள் விளங்கும் இப்பெயர்ச்சொற்கள் பல பொருள்களைத் தருவதால் அவற்றைப் **பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்** என்று அழைக்கிறோம்.

**வினைத்திரிசொல்**

கற்றவருக்கு மட்டுமே பொருள் விளங்கும் வகையில் அமைந்த வினைச்சொல் **வினைத்திரிசொல்** எனப்படும்.

**எ.கா :**

வினவினான், விளித்தான், நோக்கினான்.

வினைத்திரிசொல் இரு வகைப்படும். அவை,

i. ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்
ii. பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்

**i. ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்**

செப்பினான், உரைத்தான், மொழிந்தான், இயம்பினான் இவை கற்றவர்க்கு மட்டுமே விளங்கும் வகையில் அமைந்த வினைச்சொற்களாகும். எனவே இவை வினைத் திரிசொல் என வழங்கப்படும். இச்சொற்கள் அனைத்தும் **'சொன்னான்'** என்னும், ஒரு பொருளையே குறிப்பதால் இவற்றை **ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்** என்பர்.

**ii. பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்**

வீசு இந்த வினைச்சொல் எறி, சிதறடி, பரவச்செய், ஆட்டு என்னும் பல பொருள்களை உணர்த்துகின்றது. இது கற்றவர்கள் மட்டுமே அறியும் சொல்லாகும். இதனைப் **பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்** என்பர்.

- **திசைச்சொல்**

வடமொழி அல்லாத பிறமொழிச்சொற்கள் அம்மொழிகளில் எந்தெந்தப் பொருளில் வழங்குகின்றனவோ அந்தந்தப் பொருளிலேயே தமிழிலும் வந்து வழங்குவதைத் **திசைச் சொற்கள்** என்கிறோம்.

| | | |
|---|---|---|
| அந்தோ (ஐயோ) | – | சிங்களம் |
| செப்பு (சொல்) | – | தெலுங்கு |
| சிக்கு (அகப்படுதல்) | – | கன்னம் |
| கொக்கு (மாமரம்) | – | துளு |

**திசைச்சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தென்பாண்டி நாடு | பெற்றம் (பசு); | சொன்றி (சோறு) |
| 2. | குட்ட நாடு | தள்ளை | (தாய்) |
| 3. | குட நாடு | அச்சன் | (தந்தை) |
| 4. | கற்கா நாடு | கையர் | (வஞ்சர்) |
| 5. | வேணாடு | கிழார் | (தோட்டம்) |
| 6. | பூழி நாடு | பாழி (சிறுகுளம்) ; | ஞமலி (நாய்) |
| 7. | பன்றி நாடு | செய் | (வயல்) |
| 8. | அருவா நாடு | கேணி | (சிறுகுளம்) |
| 9. | அருவாவடதலைநாடு | எகின் | (புளி) |
| 10. | சீதநாடு | எலுவன் | (தோழன்); |
| 11. | மலாடு | இகுளை | (தோழி) |
| 12. | புனல்நாடு | ஆய் | (தாய் ) |

- **வடசொல்**

'கமலம்', 'பாவம்', 'புண்ணியம்', 'புஷ்பம்' முதலான சொற்கள் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழியில் வந்து வழங்குகின்றன. இவை போன்ற சொற்கள் **வடசொற்கள்** எனப்படும்.

**எ.கா:**

| | | |
|---|---|---|
| கமலம் | – | தாமரை |
| விஷம் (அ) விடம் | – | நஞ்சு |
| புஷ்பம் (அ) புட்பம் | – | மலர் |
| அர்ச்சனை | – | மலரிட்டு வழிபடுதல் |
| சுதந்திரம் | – | விடுதலை |
| விவாகம் | – | திருமணம் |

• **தற்சமம்**

வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் தமிழ்ச்சொற்கள் போலவே வந்து வழங்குவது **தற்சமம்** ஆகும்.

**எ.கா:**

புண்ணியம் , பாவம் , கமலம், உருவம் போன்றவை.

• **தற்பவம்**

உரிய வடமொழிக்கே சிறப்பு எழுத்துகளாகிய **ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ** ஆகிய ஐந்தும் தமிழ்மொழியில் வந்து வழங்கும்போது, தமிழ்மொழி இயல்புக்கு ஏற்பத் தமிழ் எழுத்துகளாய் ஒலி மாற்றம் பெறுகின்றன. இவ்வாறு வடமொழிச்சொற்கள் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாறித் திரிவது தற்பவம் எனப்படும்.

**எ.கா:**

கஜம் – கசம்
ஸரஸ்வதி – சரசுவதி
வருஷம் – வருடம்
தேஹம் – தேகம்
பக்ஷி – பட்சி

### 2.1.2 இலக்கண வகைச் சொற்கள்

இலக்கண வகைச் சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பனவாகும். இவற்றை இலக்கண நூல்கள் தெளிவாக விளக்குகின்றன.

- **பெயர்ச்சொல்**

ஒன்றன் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது **பெயர்ச்சொல்** ஆகும். அம்பு, கண்ணாடி, தாமரை முதலியன பெயர்ச்சொற்கள் ஆகும். பெயர்ச்சொற்களுக்கு இருவகையாக இலக்கணம் சொல்லப்படுகிறது.

- பெயர்ச்சொல் வேற்றுமையை ஏற்கும்.
- பெயர்ச்சொல் காலம் காட்டாது.

**முருகன்** என்பது ஒரு பெயர்ச்சொல். இதனுடன் வேற்றுமை உருபுகள் சேர்ந்து பின்வருமாறு அமையும்.

முருகன் + ஐ = முருகனை – (இரண்டாம் வேற்றுமை)
முருகன் + ஒடு = முருகனொடு – (மூன்றாம் வேற்றுமை)
முருகன் + கு = முருகனுக்கு – (நான்காம் வேற்றுமை)

முருகன், கல், மரம், முதலிய பெயர்ச்சொற்கள் காலத்தைக் காட்டவில்லை. பொருள் விளங்கச் சொல்வது பெயர்ச்சொல் ஆகும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் தோன்றும்.

எ.கா:

1. பொருட்பெயர் : பசு, புத்தகம், இறைவன், மனிதன்.
2. இடப்பெயர் : தஞ்சாவூர், தமிழகம், வானம், நிலம்.
3. காலப்பெயர் : மணி, ஆண்டு, நாள், மாதம், நாழிகை.
4. சினைப்பெயர் : கண், காது, கை, தலை, கிளை, பூ.
5. பண்புப்பெயர் : இனிமை, நீலம், சதுரம், வட்டம், ஏழு.
6. தொழிற்பெயர் : படித்தல், உண்ணுதல், உறங்குதல், நடை, ஆடல்.

இளங்கோவடிகள் சிறந்த புலவர்.
யானை காட்டில் வாழ்கிறது.
வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்.

இத்தொடர்களிலுள்ள, இளங்கோவடிகள், யானை, மரம் ஆகிய சொற்கள் பெயர்களைக் குறிக்கின்றன. இவ்வாறு பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் (Noun) எனப்படும். இத்தகைய பெயர்ச்சொற்களைத் தோற்ற அடிப்படையில் பொதுநிலையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் எனப் பிரித்து வகைப்படுத்துவர்.

## இடுகுறிப்பெயர்

'கல்', 'மண்' ஆகிய சொற்கள் எவற்றை உணர்த்துகின்றன என்பது நமக்குத் தெரியும். ஆனால், அப்பெயர்கள் ஏற்படக் காரணம் என்ன என்பது தெரியாது. காரணம் எதுவும் இல்லாமல் நம் முன்னோர் வழங்கியவாறே நாமும் வழங்கி வருகிறோம். இவ்வாறு, காரணம் கருதாமல், இப்பொருளுக்கு இந்தப் பெயர் எனத் தொன்றுதொட்டு இட்டு வழங்கி வரும் பெயர் 'இடுகுறிப்பெயர்' எனப்படும்.

### காரணப் பெயர்

'நாற்காலி', 'முக்கண்ணன்', 'முக்கோணம்' இவை எவற்றை உணர்த்துகின்றன என்பதும், என்ன காரணத்தால் அப்பெயர் பெற்றன என்பதும் நமக்குத் தெரியும்.

நான்கு கால் உடைய காரணத்தால் நாற்காலி என்ற பெயரைப் பெற்றது; மூன்று கண் உடையவனாதலால் முக்கண்ணன் எனப்பட்டான். மூன்று கோணங்களை உடையதால் முக்கோணம் ஆயிற்று. இவையெல்லாம் காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் என்பதை அறியலாம். இவ்வாறு, காரணங்கருதி இட்டு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

- ## வினைச்சொல்

ஒரு செயலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

வந்தான், போகிறான், உண்டார் முதலியன வினைச்சொற்கள் ஆகும். தொழிலின் காலம் காட்டும் சொல் வினைச்சொல் ஆகும்.

பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இயற்றினார்.
குமுதா பள்ளிக்கூடம் சென்றாள்.
விளக்கு எரிந்தது.

இத்தொடர்களில் உள்ள இயற்றினார், சென்றாள், எரிந்தது என்பவை, பாரதியார், குமுதா, விளக்கு முதலான பெயர்களின் வினையை அல்லது செயலைக் குறிக்கின்றன.

இவ்வாறு, வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் (Verb) எனப்படும்.

1. வினைச்சொல் வேற்றுமையை ஏற்காது.
2. வினைச்சொல் காலம் காட்டும்.

இது மூவகைப்படும்.

இறந்தகாலம் – படித்தான், நடித்தான், சென்றாள், உறங்கினார்.
நிகழ்காலம் – படிக்கின்றார், நடிக்கிறார், செல்கின்றாள், உறங்குகிறார்.
எதிர்காலம் – படிப்பான், நடிப்பான், செல்வாள், உறங்குவாள்.

### வினைமுற்று

ஒரு தொழிலைக் குறித்து வந்து முற்றுப்பெற்ற சொல் **வினைமுற்று** எனப்படும். அது திணை, பால், எண், இடம், காலம் காட்டும். பயனிலையாக வரும். வேற்றுமை உருபு ஏற்காது.

**எ.கா :**

அவள் பாடினாள், இதில் பாடினாள் என்பது இறந்தகாலம், திணை – உயர்திணை, பால் – பெண்பால், எண் – ஒருமை, இடம் – படர்க்கை.

தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என வினைமுற்று பலவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றை உணர்த்துவது **தெரிநிலை வினைமுற்று** ஆகும்

**எ.கா :**

1. செல்வி மாலை தொடுத்தாள்

1. செய்பவள் – செல்வி
2. கருவி – பூ, நார் முதலியன
3. நிலம் – வீடு அல்லது கடை
4. செயல் – தொடுத்தல் ( பூ கட்டுதல்)
5. காலம் – இறந்தகாலம்
6. செய்பொருள் – மாலை

இவ்வாறு ஒரு வினைமுற்று திணை, பால், காலம், முதலியவற்றோடு செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படையாகத் தெரிவிப்பது தெரிநிலை வினைமுற்று ஆகும்.

**எ.கா :**

2. இனியன் உணவு சமைத்தான். இந்தத் தொடரில் சமைத்தான் – என்னும் சொல் தெரிநிலை வினைமுற்று ஆகும்.

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | இனியன் |
| கருவி | – | சமையல் பாத்திரங்கள் |
| நிலம் | – | வீடு (அல்லது) அடுப்பு |
| செயல் | – | சமைத்தல் |
| காலம் | – | இறந்தகாலம் |
| செய்பொருள் | – | உணவு |

### குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறின் அடிப்படையில் தோன்றி செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினுள் செய்பவனை மட்டும் விளக்குவது குறிப்பு வினைமுற்று ஆகும்.

**எ.கா:**

1. அவன் பொன்னன் – பொருள்
2. அவன் சென்னையான் – இடம்
3. அவன் சித்திரையான் – காலம்
4. அவன் கண்ணன் – சினை
5. அவன் இனியன் – குணம்
6. அவன் நடிகன் – தொழில்

மேற்சொன்ன சான்றுகள் செய்பவன் என்பதை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி, மற்றவற்றைக் குறிப்பால் உணர்த்தின. எனவே அவை குறிப்பு வினைமுற்றுகளாம். குறிப்பு வினைமுற்று அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் பிறக்கும். இதில் காலம் குறிப்பாக வரும்.

**எ.கா:**

| | |
|---|---|
| பொருள் குறிப்பு வினைமுற்று | பொன்னன், மணியன் |
| இடக்குறிப்பு வினைமுற்று | ஊரன், தென்னாட்டான் |
| காலக்குறிப்பு வினைமுற்று | ஆதிரையான், காரான் |
| சினைக்குறிப்பு வினைமுற்று | கண்ணன், பல்லன் |
| பண்புக் (குணம்) குறிப்பு வினைமுற்று | கரியன், தீயன் |
| தொழில் குறிப்பு வினைமுற்று | நடிகன் |

| தெரிநிலை வினைமுற்று | குறிப்பு வினைமுற்று | அறுவகைப் பெயர் |
|---|---|---|
| செய்தான் மகன் | பெரியன் மகன் | பொருள் |
| குளிர்ந்தது நிலம் | வலியது நிலம் | இடம் |
| வந்தது கார் | நல்லது கார் | காலம் |
| குவிந்தது கை | சிறியது கை | சினை |
| ஒளிர்ந்தது வெண்மை | நல்லன் இவன் | குணம் |
| முடிந்தது உழவு | இன்சொல்லன் இவன் | தொழில் |

- **இடைச்சொல்**

இடை என்ற சொல்லுக்கு இடம் என்றும், இடையில் (நடுவில்) என்றும் பொருள்கள் உள்ளன. தனித்து இயங்காமல் பெயருடன் அல்லது வினையுடன் சேர்ந்து வரும் சொற்கள் **இடைச்சொற்கள்** எனப்படும். இடைச்சொற்கள் தனித்துப் பொருள் தருவதில்லை. இவை பெயருக்கும் வினைக்கும் அடுத்த நிலையில் பயன்பாடுடைய சொற்கள் ஆகும்.

அணிகலன் செய்ய பொன்னுக்கு இடையே இருந்து உதவும் இடைக்கருவிகள் போலப் பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடைநிற்பது இடைச்சொல் ஆகும்.

எ.கா:

அ + ஊர் = அவ்வூர்

அ என்ற சுட்டு இடைச்சொல் சொல்லின் முதலில் வந்தது.

1. அவன் + ஐ = அவனை

   ஐ உருபாகிய இடைச்சொல் சொல்லின் இறுதியில் வந்தது.

2. போ + வ் + ஆன் = போவான்

   வ் என்ற எதிர்கால இடைநிலை சொல்லின் இடையில் வந்தது.

கல்வியால் அறிவும் பண்பும் பெறுவோம். இச்சொற்றொடரில், 'அறிவும் பண்பும்' என்பனவற்றில் உள்ள 'உம்' (அறிவு+உம், பண்பு+உம்) 'பெறுவோம்' என்பதில் உள்ள 'ஓம்' (பெறு+ஓம்) இவை யாவும் பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் இடமாகக் கொண்டு வருகின்றன.

இவ்வாறு, பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் இடைச்சொல் (Conjunctions (or) Particles) எனப்படும். இடைச்சொற்கள் பல இருக்கின்றன. அவற்றுள் எட்டு வகையான இடைச்சொற்களைப் பார்ப்போம்.

- **வேற்றுமை உருபுகள்**

பெயர்ச்சொற்களில் இறுதியில் பொருள் வேறுபாட்டிற்காக வரும் வேற்றுமை உருபுகள் இடைச்சொற்கள் தன்மையை உடையன. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைக்கும் உருபுகள் உண்டு. அவை,

இரண்டாம் வேற்றுமை – ஐ

மூன்றாம் வேற்றுமை – ஆல்

இரண்டாம் வேற்றுமை – ஐ
நான்காம் வேற்றுமை – கு
ஐந்தாம் வேற்றுமை – இன்
ஆறாம் வேற்றுமை – அது
ஏழாம் வேற்றுமை – கண்

### காலம் காட்டும் இடைநிலைகளும் விகுதிகளும்

வினைச்சொற்களில் வரும் காலம் காட்டுகின்ற இடைநிலைகளும் விகுதிகளும் இடைச்சொற்கள் ஆகும். கிறு, கின்று, ஆநின்று முதலியவை காலம் காட்டும் இடைநிலைகள் ஆகும். அன், ஆன் முதலியவை விகுதிகள் ஆகும்.

எ.கா:

கொடுத்தான் – கொடு +த்+ஆன்

### • உவம உருபுகள்

இரு பொருள்களுக்கு இடையே ஒப்புமை காட்ட உதவுவன. போல, அன்ன, அனைய, ஒப்ப, புரைய என்பன உவம உருபுகள் ஆகும்.

உவமைத் தொடர்களில் உவம உருபுகள் வரும்.

எ.கா:

மலர் **போல்** அழகிய முகம்.

இதில் போல் என்பது உவம உருபு.

### • சாரியைகள்

சந்தி இலக்கணத்தில் வரும் சாரியைகள் இடைச்சொற்களாகும்.

எ.கா:

ஆல் + **அம்** + கட்டி = ஆலங்கட்டி

என்பதில் அம் சாரியை இடையில் வந்துள்ளது

### தத்தம் பொருளை உணர்த்தி வருபவை

ஏ, ஓ, உம் முதலிய இடைச்சொற்கள் தத்தம் பொருளை உணர்த்தி வருபவை.

எ.கா:

அவளே கொண்டாள் – ஏ
அவளோ கொண்டாள் – ஓ

அவளே கொண்டாள் – ஏ
அவளும் வந்தாள் – உம்

• **இசைநிறை**

ஏ, ஒடு, ஓ, மார், ஆன முதலிய இடைச்சொற்கள் செய்யுளில் பொருள் இன்றி இசைநிறைவு செய்ய வருவன. இவை இசைநிறை சொற்கள் ஆகும்.

**எ.கா:**

ஏஏ இவள் ஓர் அழகியே – ஏ
கொல்லோ – ஓ
செல்லுமார் – மார்
வயினான – ஆன

• **அசைநிலை**

மன், மற்று, கொல் ஆகிய இடைச்சொற்கள் செய்யுளில் பொருள் இன்றி அசையாகவும் பயன்படுகின்றன.

**எ.கா:**

உடையேன்மன் – மன்
இதுவும்மற்று – மற்று
புலிகொல் யானை – கொல்

• **குறிப்பால் பொருள் உணர்த்துபவை**

கலகலவென', 'நிலமென' இவற்றில் வரும் 'என' என்பது குறிப்புப்பொருள் உணர்த்தும் இடைச்சொல் ஆகும். மேலே காட்டியவாறு இடைச்சொல் எட்டு வகையாக வரும்.

• **உரிச்சொல்**

பல வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தி வருவது **உரிச்சொல்** ஆகும். (பண்பு – குணம்) இது பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும். செய்யுளுக்கு உரியதாய் வரும். மருவி நிற்கும் சொல்லோடு மருவாத சொல்லை உரிமையோடு சேர்த்துச் சொல்வதை உரிச்சொல் என்பர்.

**எ.கா:**

கடிமனை.
நனி சிரித்தான்.

'மனை' என்னும் பெயர்ச்சொல்லையும் 'சிரித்தான்' என்னும் வினைச்சொல்லையும் சார்ந்து நின்று, முறையே, காவல் மிகுந்த மனை(வீடு)' (கடி–காவல்) 'மிகவும் மகிழ்ந்தான்' (நனி–மிகவும்) என அவற்றின் தன்மையை எடுத்துரைக்கின்றன. மேலும், செய்யுளுக்கே உரியதாகவும் விளங்குகின்றன. ஆதலால் இவை (கடி, நனி) உரிச்சொற்கள் எனப்படுகின்றன. (Attributive) உரிச்சொல்லானது, ஒரே பொருள் தரும் பல உரிச்சொல் எனவும், பல பொருள் தரும் ஓர் உரிச்சொல் எனவும் இரு வகைப்படும்.

### அ. ஒரே பொருள் தரும் பல உரிச்சொல்

சால, உறு, தவ, நனி, கூர், கழி இவை யாவும் 'மிகுதி' என்னும் ஒரே பொருள் தருவன.

**எ. கா :**

சாலப் பேசினான். உறு புகழ். தவச் சிறந்தது. நனி தின்றான்.

### ஆ. பல பொருள் தரும் ஓர் உரிச்சொல்

'கடி' என்னும் சொல்லானது காப்பு, கூர்மை, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு ஆகிய பல பொருள்களைத் தரும்.

## 2.2 வேற்றுமை உருபுகள்

### வேற்றுமை உருபுகள்

**வைஷ்ணவி வந்தாள்**
**வைஷ்ணவியைப் பார்த்தான்**
**வைஷ்ணவியால் வரையப்பட்டது**

இந்த மூன்று தொடர்களில் முதல் தொடரில் **'வைஷ்ணவி'** என்பது எழுவாய், இரண்டாம் தொடரில் **'வைஷ்ணவி'** செயப்படுபொருள், மூன்றாம் தொடரில் **'வைஷ்ணவி'** என்னும் எழுவாய் செயப்படுபொருளாகவும் கருத்தாவாகவும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு **"பெயர்ச்சொல்லினை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை"** எனப்படும்.

வேற்றுமைகள் எட்டு ஆகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபுகள் உண்டு.

### 2.2.1 முதல் வேற்றுமை

**வேலன் படித்தான்.**

இதில் **வேலன்** என்னும்பெயர் எழுவாயாகிப் **படித்தான்** என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. எழுவாயே முதல் வேற்றுமையாகும். இதன் உருபு, திரிபு இல்லாத பெயரேயாகும்.

**வேலன் நல்ல சிறுவன்.**

இதில் **வேலன்** என்னும் எழுவாய் **சிறுவன்** என்னும் பெயர்ச்சொல்லைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

**வேலன் யாவன் ?**

இதில் **வேலன்** என்னும் எழுவாய் **யாவன்** என்னும் வினாவைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

முதல் வேற்றுமையாவது எழுவாயாகும். இது வினைமுற்றையோ பெயரையோ வினாவையோ பயனிலையாகக் கொண்டு முடியும். முதல் வேற்றுமையின் பொருள் கருத்தாப் பொருளாகும். (கருத்தா, வினைமுதல், செய்பவன், எழுவாய் எனும் இவை ஒரு பொருளுடைய சொற்கள்).

### 2.2.2 இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு **'ஐ'** ஆகும். இஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒப்பு, உடைமை முதலிய பொருள்களில் வரும்.

**வீட்டைக் கட்டினான்** – ஆக்கல்
வீடு ஆக்கப்படு பொருளாயிற்று
**வீட்டை இடித்தான்** – அழித்தல்
வீடு அழிக்கப்படு பொருளாயிற்று
**ஊரை அடைந்தான்** – அடைதல்
ஊர் அடையப்படு பொருளாயிற்று
**உலகை வெறுத்தான்** – நீத்தல் (பற்று நீங்குதல்)
உலகு நீக்கப்படு பொருளாயிற்று
**தேனை யொத்தது பலாச்சுளை** – ஒப்பு
தேன் ஒப்புப் பொருளாயிற்று
**செல்வத்தை உடையவள் செம்பிறை** – உடைமை
செல்வம் உடைமைப் பொருளாயிற்று

### 2.2.3 மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபுகள் **ஆல், ஆன், ஒடு, ஓடு** என்பன. ஆல், ஆன் என்பன கருவி, கருத்தாப் பொருள்களில் வரும். ஒடு, ஓடு என்பன உடன்நிகழ்ச்சிப் பொருளில் வரும்.

| | | |
|---|---|---|
| வாளால் வெட்டினான்<br>வாளான் வெட்டினான் | – | கருவி |
| அரசனால் கட்டப்பட்ட கோயில்<br>தச்சனால் செய்யப்பட்ட பெட்டி | – | கருத்தா |
| தாயொடு மகள் வந்தாள்<br>ஆசிரியரோடு மாணாக்கன் வந்தான் | – | உடனிகழ்ச்சி |

ஆல், ஆன் என்னும் உருபுகளுக்கு ஈடாகக் 'கொண்டு' என்னும் சொல்லுருபும், ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்கு ஈடாக, உடன் என்னும் சொல்லுருபும் பயன்படுகின்றன.

எ.கா:

வாள்கொண்டு அறுத்தான்
தாயுடன் மகள் வந்தாள்

ஒரு வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்தில், அதற்கு ஈடாக ஒரு சொல் வந்து பொருள் உணர்த்துவது சொல்லுருபு எனப்படும்.

### 2.2.4 நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமை உருபு **'கு'** என்பதாகும். இவ்வுருபு கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| **ஏழைக்குக் கொடுத்தான்** | – | கொடை |
| **பாம்புக்குப் பகை மயில்** | – | பகை |
| **இராமனுக்கு நண்பன் குகன்** | – | நேர்ச்சி (நட்பு) |
| **வீரனுக்கு உரியது வாள்** | – | தகுதி |
| **நகைக்குத் தங்கம் கொடு** | – | அதுவாதல் |
| **கூலிக்கு வேலை செய்தான்** | – | பொருட்டு |
| **தருமனுக்குத் தம்பி பீமன்** | – | முறை |

நான்காம் வேற்றுமைக்கு **பொருட்டு, நிமித்தம், ஆக** என்பன சொல்லுருபுகளாக வரும்.

கூலியின் பொருட்டு வேலை செய்தான்
கூலியின்நிமித்தம் வேலை செய்தான்
கூலிக்காக வேலை செய்தான்

### 2.2.5 ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் **இல், இன்** என்பனவாகும். இவ்வுருபுகள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| மலையின் வீழருவி | – | நீங்கல் |
| தேளின் கொடியது பாம்பு | – | ஒப்பு |
| இந்தியாவின் வடக்கே இமயமலை | – | எல்லை |
| கொடையிற் சிறந்தவர் பாரி | – | ஏது |

இல், இன் உருபுகளின் இடத்தில் **நின்று, இருந்து** என்பன சொல்லுருபுகளாக வரும்.

ஊரினின்று நீங்கினான்
ஊரிலிருந்து போனான்

### 2.2.6 ஆறாம் வேற்றுமை

**அது, ஆது, அ** என்பன ஆறாம் வேற்றுமையின் உருபுகளாகும். இவற்றுள் அது, ஆது என்னும் இரண்டும் ஒருமைக்கும், 'அ' என்னும் உருபு பன்மைக்கும் வரும்.

| | | |
|---|---|---|
| கண்ணனது பை | – | அது |
| தனாது சுவடி | – | ஆது |
| என நூல்கள் | – | அ |

ஆறாம் வேற்றுமை உருபு தற்கிழமைப்பொருளிலும், பிறிதின்கிழமைப் பொருளிலும் வரும். தற்கிழமையாவது, தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் தொடர்பை உணர்த்துவதாகும். இது பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம் (ஒரு பொருட் கூட்டம்), பலவின் ஈட்டம் (பல பொருட் கூட்டம்), திரிபின் ஆக்கம் (ஒன்று திரிந்து ஒன்றாதல்) என ஐந்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| முருகனது பெருமை | – | பண்புத் தற்கிழமை |
| கண்ணனது கை | – | உறுப்புத் தற்கிழமை |
| நெல்லினது குவியல் | – | ஒன்றன் கூட்டத் தற்கிழமை |
| பறவைகளது கூட்டம் | – | பலவின்கூட்டத் தற்கிழமை |
| மஞ்சளது பொடி | – | திரிபின் ஆக்கத் தற்கிழமை |

பிறிதின்கிழமையாவது, தன்னின் வேறாய பொருளின் தொடர்பை உணர்த்துவது. இது பொருள், இடம், காலம் என மூவகைப்படும்.

| | | |
|---|---|---|
| குமரனது ஆடை | – | பொருள் பிறிதின் கிழமை |
| கந்தனது வீடு | – | இடப்பிறிதின் கிழமை |
| வள்ளுவரது நாள் | – | காலப் பிறிதின் கிழமை |

**உடைய** என்பது ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக வரும்.

### 2.2.7 ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமை உருபு **'கண்'** என்பதாகும். இதனை இடவேற்றுமை எனவும் கூறுவர். இவ்வேற்றுமைக்குக் 'கண்' உருபேயன்றிக் கால், கடை, வழி, இடத்து, வாய், தலை, வலம், இடம், மேல், கீழ், பின், முன், உள், அகம், புறம் முதலிய உருபுகளும் உள்ளன.

இவ்விடப் பொருள், தற்கிழமைப்பொருளிலும் பிறிதின்கிழமைப் பொருளிலும் வரும். பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் இவ்விரு பொருளுக்கும் இடமாய் அமையும்.

#### தற்கிழமை

| | | |
|---|---|---|
| மணியின்கண் உள்ள ஒலி | – | பொருள் |
| கடலின்கண் உள்ள அலை | – | இடம் |
| நாளின்கண் உள்ள நாழிகை | – | காலம் |
| விரலின்கண் உள்ள நகம் | – | சினை |
| கறுப்பின்கண் உள்ள அழகு | – | பண்பு |
| ஆடலின்கண் உள்ள அழகு | – | தொழில் |

### பிறிதின்கிழமை

| | | |
|---|---|---|
| தினையின்கண் உள்ள கிளி | – | பொருள் |
| விண்ணின்கண் பறக்கும் பருந்து | – | இடம் |
| பகலின்கண் மலரும் தாமரை | – | காலம் |
| கையின்கண் உள்ள வளையல் | – | சினை |
| இளமையின்கண் உள்ள செல்வம் | – | பண்பு |
| ஆடற்கண் பாடிய பாட்டு | – | தொழில் |

### 2.2.8 எட்டாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமை உருபுக்கு எனத் தனியுருபு இல்லை. பெயர் இயல்பாய் நிற்றலும், பெயரின் ஈறு திரிதலும், ஈறு குன்றுதலும், ஈறு மிகுதலும், ஈற்றயல் திரிதலும் இதன் உருபுகளாகும். இதன் பொருள் விளிப்பொருள். இவ்வேற்றுமை விளிவேற்றுமை எனவும் பெயர் பெறும்.

| | | | |
|---|---|---|---|
| தந்தை–தந்தாய்! | தோழி–தோழீ ! | – | ஈறு திரிதல் |
| நண்பன் – நண்ப ! | முருகன் – முருக ! | – | ஈறு குன்றல் |
| கண்ணன் – கண்ணனே ! | தலைவன் – தலைவனே ! | – | ஈறு மிகுதல் |
| தம்பி – தம்பி ! | முருகன் – முருகன் ! | – | இயல்பாதல் |
| மக்கள் – மக்காள் ! | புலவர் – புலவீர் ! | – | ஈற்றயல் திரிதல் |

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? |
| 2. திசைச்சொல் என்றால் என்ன? |
| 3. வடசொல் என்றால் என்ன? |
| 4. இடுகுறிப் பெயர் என்றால் என்ன? |
| 5. இடைச்சொல் என்றால் என்ன? |
| 6. வேற்றுமை உருபுகள் யாவை? |

## 2.3 பதம் வகைகள் (பகுபதம், பகாப்பதம்)

### பதம்

நாம் பேசும்போது சொற்களாய்ப் பேசுவதைக் காட்டிலும் தொடர்களாய்ப் பேசுவது மிகுதி. அவ்வகையில் எழுத்துகள் பல சேர்ந்து பொருள் தரும் சொற்களாகின்றன. சொற்கள் பல சேர்ந்து தொடர்களாகின்றன. இந்தப் பிணைப்பு ஒன்றுடன் ஒன்று சங்கிலித்தொடர்போல் இணைந்துள்ளது. இந்தப்பாடம், உங்களுக்குத் தமிழில் வழங்கும் சொல்வகைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் எடுத்துரைக்கிறது.

ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது, **சொல்** எனப்படும்.

எ.கா.

பூ, கனி, கல்வி, பட்டம்.

எழுத்துகளால் உருவானதாக இருந்தாலும் பொருள் தருவதாக இருந்தால் மட்டுமே அது சொல் எனப்படுகிறது. பொருள் தராதவை சொல் என்று கூறப்படுவது இல்லை. எடுத்துக்காட்டாக,

**வில்க** இதில் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்துள்ளன. ஆயினும், பொருள் தரவில்லை. எனவே, இதனைச் சொல் என்று சொல்வதில்லை.

ஒரு மொழிக்கு அடிப்படை அம்மொழியில் உள்ள எழுத்துகள் ஆகும். எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து சொல் உருவாகிறது. **கிளவி, பதம், மொழி** என்பன சொல்லின் வேறுபெயர்கள். ஒரு சொல் தனித்து நின்றோ பல சொற்கள் சேர்ந்து நின்றோ சொற்றொடர் உருவாகும். இவ்வாறு ஒரு மொழியின் படிநிலைகள் அமைகின்றன.

**ஓர் எழுத்துச் சொற்கள்** = பூ, வா, ஆ, கை, பை, ஈ, தை.
**ஈரெழுத்துச் சொற்கள்** = நட, நில், படி, கண், இழு.
**மூவெழுத்துச் சொற்கள்** = பலம், புறம், கடல், தண்மை, மாண்பு.
**நாலெழுத்துச் சொற்கள்** = கடவுள், சிறுத்தை, வேந்தன், அரும்பு, தங்கம்.

மேலும், நாலெழுத்துகளுக்கு மேற்பட்ட சொற்களும் தமிழில் உண்டு.

பதம் இரண்டு வகைப்படும். பகுப்பதம் மற்றும் பகாப்பதம் ஆகும்.

பிரிக்கக்கூடிய சொல் பகுபதம் ஆகும்.

பிரிக்க இயலாத சொல் பகாப்பதம் ஆகும்.

### 2.3.1 பகுப்பதம்

பகுபதங்களைப் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டாகப் பகுக்கலாம். வினைப்பகுபதம், தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்பு வினைப்பகுபதம் என்று இருவகைப்படும்.

ஒரு பகுபதச் சொல் பிரிந்து நிற்கும் நிலையில் அமையும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனலாம். இப்பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்பனவாகும்.




ஒரே சொல்லில் இந்த ஆறு உறுப்பும் அமையலாம். ஒன்றோ பலவோ குறைந்தும் வரலாம்.

**எ.கா.**

கண்டனன் = காண் (கண்) + ட் + அன் + அன்

வாழ்க = வாழ் + க

- **பகுதி**

ஒரு பகுபதத்தின் முதலில் அமையும் உறுப்பு பகுதி ஆகும். எனவே, இதனை முதனிலை என்றும் வழங்கலாம். பகுதி பெயர்ச்சொல்லாக வந்தால் பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் ஆகிய அறுவகைப் பெயர்ச்சொற்களுள் ஒன்றாகவும் வினைச்சொல்லாக இருப்பின், விகுதி பெறாத ஏவல்வினையாகவும் அமையும். பகுபதத்திலுள்ள பகுதி பொருள் உடையதாக இருக்கும். உண்டான் என்னும் பகுபதத்தில் (உண்+ட்+ஆன்) உண் என்பது பகுதியாகும்.

1. பொருட்பெயர் – பொன்னன் (பொன் + அன்)
2. இடப் பெயர் – வெற்பன் (வெற்பு + அன்)
3. காலப் பெயர் – ஆதிரையன் (ஆதிரை + அன்)
4. சினைப் பெயர் – கண்ணன் (கண் + அன்)
5. குணப் பெயர் – கரியன் (கருமை + அன்)
6. தொழிற் பெயர் – சொல்லன் (சொல் + அன்)

- **விகுதி**

பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு என்பதால், இதனை இறுதிநிலை என்றும் வழங்குவர்.

உண்டான் என்னும் பகுபதத்தில் (உண் + ட் + ஆன்) ஆன் என்பது விகுதி ஆகும். இது திணை (உயர்திணை), பால் (ஆண்பால்), எண், (ஒருமை) இடம் (படர்க்கை) ஆகியவற்றைக் காட்டிநிற்கும்.

**ஆண்பால் பெயர் விகுதிகள்**

அன், ஆன், மன், மான்

**சான்று:**

வெற்பன்(அன்), வானத்தான்(ஆன்), வடமன்(மன்), மலையமான்(மான்),

**பெண்பால் விகுதிகள்**

அள், ஆள், இ, ஐ என்ற விகுதிகள் வருகின்றன.

**சான்று:**

இவள் (அள்), குழலாள்(ஆள்), பொன்னி(இ), கோதை (ஐ).

**பலர்பால் பெயர் விகுதிகள்**

அர், ஆர், மார்,

**சான்று:**

மறவர்(அர்), ஓதுவார்(ஆர்), தேவிமார்(மார்)

**ஒன்றன்பால் பெயர் விகுதி**

து

ஈற்றில் முடிவது ஒன்றன்பால் ஆகும்.

**சான்று:**

அது, யாது, அஃது.

### பலவின்பால் பெயர் விகுதிகள்

வை, அ, கள்.

**சான்று:**

அவை (வை), கரியன(அ), கிளிகள்(கள்).

பன்மையைக் குறிக்கப் பெயர்களோடு சேர்க்கப்படும் 'கள்' விகுதி உயர்திணைப் பன்மைப் பெயர்களோடும் அஃறிணைப் பன்மைப் பெயர்களோடும் சேர்க்கப்படுகின்றன.

**சான்று:**

நாம், இவை, இச்சொற்களே பன்மையைக் குறிக்கும். பன்மையைக் குறிக்க கள் விகுதியை மேலும் இவற்றோடு சேர்க்க வேண்டியதில்லை. ஆனால் பயன்பாட்டில் சேர்க்கின்றோம். இதை **விகுதி மேல் விகுதி** என்பர்.

நாங்கள் (நாம் + கள்) அவர்கள்(அவர் + கள்), உயர்திணைப் பன்மைப் பெயர்கள்.

('நாம்' என்பது 'உளப்பாட்டுத் தன்மைப்பன்மையாகவும், 'நாங்கள்' என்பது 'விலக்கீட்டுத் தன்மைப்பன்மையாகவும் வழங்குகின்றன).

இவை, இக்கால வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆயினும், இவைகள் (இவை + கள்) என்னும் சொல் தவறான சொல்லாக்கமாகக் கொள்ளப்படுகிறது. 'இது' என்னும் ஒருமைக்கு 'இவை' என்பதே பன்மையாகும்.

- **இடம்**

பேசுகின்றவன் தன்னைத்தானே குறித்துக் கூறும் சொல் தன்மை. தனக்கு முன்னால் யாரிடம் பேசுன்றானோ, அவனைக் குறிக்கும் சொல் முன்னிலை. தன்னையும் குறிக்காமல், எதிரில் இருப்பவனையும் குறிக்காமல் வேறொருவனைக் குறிக்கும் சொல் படர்க்கை. இவ்வாறாக **தன்மை, முன்னிலை, படர்க்கை** என இடம் மூன்று வகைப்படும்.

நான் பார்த்தேன் – தன்மை

நீ பார்த்தாய் – முன்னிலை

அவர் பார்த்தார் – படர்க்கை

- ## இடைநிலை

முதனிலைக்கும் (பகுதி) இறுதிநிலைக்கும் (விகுதி) இடையில் நிற்கும் உறுப்பு என்பதால் இடைநிலை என்னும் பெயர் பெறுகின்றது. பெரும்பாலும் காலம்காட்டும் உறுப்பாகவும், எதிர்மறைப் பொருள்தரும் உறுப்பாகவும் வரும். வினைப்பகுபதத்தில் இடைநிலை காலம் காட்டும் உறுப்பு ஆகும்.

உண் + ட் + ஆன் என்னும் பகுபதத்தில் – உண் – முதனிலை, ட் – இடைநிலை, ஆன் – இறுதிநிலை (விகுதி)

'இடைநிலை' – பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்திருத்தலைக் காணலாம். இந்த இடைநிலை இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்றாகும்.

| | | |
|---|---|---|
| இறந்தகால இடைநிலை | – | த், ட், ற், (இ)ன் |
| நிகழ்கால இடைநிலை | – | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலை | – | ப், வ் |
| எதிர்மறை இடைநிலை | – | ஆ, ஆல், இல் |

### இறந்தகால இடைநிலை

நடந்தான், கேட்டாள், கற்றார், பாடினாள் இவை யாவும் இறந்தகால வினைமுற்றுகள். இச்சொற்களின் இடையில் உள்ள த், ட், ற், இன் ஆகிய நான்கும் இறந்த காலம் உணர்த்தும் இடைநிலைகள் ஆகும்.

### நிகழ்கால இடைநிலை

உண்கிறான், ஆடுகின்றாள், செல்லாநின்றார், (செல்கிறார் என்பது பொருள்) இந்த வினைமுற்றுச்சொற்கள் நிகழ்காலம் உணர்த்துகின்றன. நிகழ்காலம் உணர்த்தும் இடைநிலைகள் கிறு, கின்று, ஆநின்று ஆகிய மூன்றும் ஆகும். இக்காலத்தில் 'ஆநின்று' என்ற இடைநிலை வழக்கில் இல்லை.

### எதிர்கால இடைநிலை

காண்பார், தேடுவார்

இவ்விரு வினைமுற்றும் எதிர்காலம் உணர்த்தும் சொற்களாகும். இச்சொற்களில் உள்ள ப், வ், ஆகிய இரண்டும் எதிர்காலம் உணர்த்தும் இடைநிலைகள்.

- **சந்தி**

இது பெரும்பாலும் முதனிலை (பகுதி)க்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் சிறுபான்மை வரக்கூடும். உறுப்புகளின் இணைவில் வருவது (சந்தி) ; உறுப்புகளை இணைக்க வருவது சந்தி. நடத்தல் என்னும் பகுபதம் நட + த் + தல் என்று பிரிந்து வரும்.

நட – பகுதி ; த் – சந்தி ; தல் – விகுதி

பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் 'த்' சந்தி வந்திருப்பதைக் காண முடிகிறது.

- **சாரியை**

இது பெரும்பாலும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் உறுப்பு ஆகும். சிறுபான்மையாகச் 'சந்தி'க்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

சாரியை = சார்ந்து இயைந்து நிற்பது. தனக்கெனப் பொருள் எதுவும் இன்றிப் பிற உறுப்புகள் இணையும்போது இடையில் வருவது.

வந்தனன் என்னும் சொல் 'வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்' வா – பகுதி த் – சந்தி 'ந்' ஆனது விகாரம் த் – இடைநிலை அன் – சாரியை அன் – விகுதி

'த்' இடைநிலைக்கும், 'அன்' விகுதிக்கும் இடையில் சாரியை வந்துள்ளதைக் காணலாம்.

இனிப் பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவேயும் அரிதாகச் சாரியை இடம்பெறுவது உண்டு.

உய்குவை – உய் + கு + வ் + ஐ (கு – சாரியை)
பணிகுவோம் – பணி + கு + வ் + ஆம் (கு – சாரியை)

- **விகாரம்**

விகாரம் என்பது தனி உறுப்பு இல்லை. பகுதி, விகுதி முதலான உறுப்புகள் சேர்தலால் ஏற்படும் மாற்றத்தை விகாரம் என்கிறோம்.

**சான்று:**

கண்டான் = காண் (கண்) + ட் + ஆன்

காண் என்னும் பகுதி கண் என விகாரப்பட்டது. பகுதி தொழிலை உணர்த்தும் ஏவலாக இருக்கும். மூன்று காலங்களுக்கும் ஒன்றே ஆகையால் 'காண்' என்பதே பகுதியாக இருக்க வேண்டும். இது பகுதி திரிந்த விகாரம்.

**சான்று:**

நடந்தான் = நட + த் (ந்) + த் + ஆன்

இதில் 'நட' என்னும் பகுதியை அடுத்துள்ள சந்தி 'த்' ஆகும் இச்சந்தியைத் திரிக்காமல் எடுத்துக் கொண்டால் 'நடத்தான்' என்று கூற வேண்டும். ஆனால் நடந்தான் என்பது சொல்லாகையால் 'த்' என்னும் சந்தி 'ந்' எனத் திரிந்து வந்துள்ளது. இது சந்தி திரிந்த விகாரம்.

**சான்று:**

வந்தான் = வா (வ) + த் (ந்) + த் + ஆன்

வா என்னும் பகுதி 'வ' என விகாரப்பட்டது. த் என்னும் சந்தி 'ந்' என விகாரப்பட்டது. இதுவும் பகுதி திரிந்த விகாரம்.

### 2.3.2 பகாப்பதம்

பகுக்கப்படாத இயல்பையுடைய சொற்கள் பகாப்பதம் ஆகும். எடுத்துக்காட்டாக மண், கண், நிலம், காற்று, நாய், வா.

பகாப்பதத்தின் வகைகளாவன : பெயர்ப்பகாபதம், வினைப்பகாபதம், இடைப்பகாபதம், உரிப்பகாபதம்.

- **பெயர்ப்பகாப்பதம்**

பெயர்ச் சொற்களாக அமையும் பகாப்பதங்கள் பெயர்ப்பகாப்பதம் எனப்படும்.

**எ.கா:**

நெருப்பு, காற்று, நிலம், நீர்.

- **வினைப்பகாப்பதம்**

வினைச்சொற்களாக அமையும் பகாப்பதங்கள் வினைப்பகாப்பதம் எனப்படும்.

எ.கா:

உண், தின் , நட, வா.

- **இடைப் பகாப்பதம்**

இடைச் சொற்களாக அமையும் பகாப்பதங்கள் இடைப் பகாப்பதம் எனப்படும்.

(எ.கா)

மன், கொல், போல், மற்று.

- **உரிப் பகாப்பதம்**

உரிச் சொற்களாக அமையும் பகாப்பதங்கள் உரிப் பகாப்பதம் எனப்படும்.

எ.கா:

**கூர், மிகு, உறு, தவ, நனி, கழி**

மேலே சுட்டிய எடுத்துக்காட்டுகளில் கண்ட பெயர், வினை, இடை, உரிச் சொற்களைப் பிரித்தால் பொருள் தருவதில்லை; அவை இடுகுறியில், இட்டு வழங்கி வருகின்ற தன்மையில் அமைந்தவை.

### 2.3.3 எழுத்துப்பேறு

சில பகுபதச்சொற்களில் விகுதி ஓர் எழுத்து பெற்று வருதலும் உண்டு. அவ்வெழுத்திற்குப் பொருள் இல்லை. அம்முறையில் வரும் எழுத்துக்கு, எழுத்துப்பேறு எனக் கூறுவர் புலவர் (எழுத்தைப் பெறுதல் – எழுத்துப்பேறு)

கூறுதி – கூறு + த் + இ
கூறு – பகுதி, இ – விகுதி (முன்னிலை)
த் – எழுத்துப்பேறு

விளக்கம் : கூறுதி – என்பது முன்னிலை வினைப்பகுபதம். இதில் காலம் காட்டும் இடைச்சொற்கள் இல்லை. **இ** – விகுதியே எதிர்காலம் காட்டுகிறது. இகர விகுதி **த்** என்னும் எழுத்தைப் பெற்றது. எனவே, இதை **எழுத்துப்பேறு** எனல் வேண்டும்.

- **எழுத்துப் பேறுடைய பகுபதம்**

போகாத – போ + கு + ஆ + த் + அ
போ – பகுதி
அ – விகுதி (பெயரெச்சம்)
ஆ – இடைநிலை (எதிர்மறை)
கு – சாரியை

போகாத – போ + கு + ஆ + த் + அ

த் – எழுத்துப்பேறு

## 2.4 தொடர்வகை : தொகைநிலை, தொகாநிலை

### தொடர்வகை : தொகைநிலை, தொகாநிலை

தொடர் தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இரு வகைப்படும்

### 2.4.1 தொகைநிலைத் தொடர்கள்

பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் அல்லது பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு, உவமை முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) நிற்குமானால் அது **தொகைநிலைத்தொடர்** எனப்படும். இதனைத் **தொகை** என்றும் சுருக்கமாகக் கூறுவர். வினைச்சொல்லோடு வினைச்சொல் சேர்ந்து தொகைநிலைத்தொடர் அமைவதில்லை.

தொகைநிலைத்தொடர் ஆறு வகைப்படும். அவை :

1. **வேற்றுமைத்தொகை**
2. **பண்புத்தொகை**
3. **உவமைத்தொகை**
4. **உம்மைத்தொகை**
5. **அன்மொழித்தொகை**

என்பனவாகும்.

#### • வேற்றுமைத்தொகை

**திருக்குறள் படிக்கிறான்.**

இத்தொடர் '**திருக்குறளைப் படிக்கிறான்**' என்னும் பொருளை உணர்த்துகிறது. இத்தொடரிலுள்ள இரண்டு சொற்களுக்கு நடுவில் ஐ என்னும் உருபு மறைந்து நின்று அப்பொருளைத் தருகிறது. எனவே, இது வேற்றுமைத்தொகை எனப்படுகிறது.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் உணர்த்துவதை **வேற்றுமைத் தொகை** எனக் கூறுவர்.

| | | |
|---|---|---|
| பால் அருந்தினான் | – ஐ | – இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தலை வணங்கினான் | – ஆல் | – மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| பள்ளி சென்றாள் | – கு | – நான்காம் வேற்றுமைத்தொகை |
| சிறை நீங்கினான் | – இன் | – ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| அழகன் நூல் | – அது | – ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மலைவாழ்வோர் | – கண் | – ஏழாம் வேற்றுமைத்தொகை |

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபில்லாததால், அவற்றிற்குத் தொகை இல்லை.

- **உருபும், பயனும் உடன் தொக்க தொகை**

**தேர்ப்பாகன்**

இத்தொடர் 'தேரை ஓட்டும் பாகன்' என விரிந்து பொருளை உணர்த்துகின்றது. கொடுக்கப்பட்டுள்ள தேர், பாகன் என்னும் சொற்களுக்கிடையில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபும் 'ஓட்டும்' என்னும் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.

இவ்வாறு ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். இதுவும் வேற்றுமைத் தொகையே ஆகும்.

| | | |
|---|---|---|
| தேர்ப்பாகன் | – | (தேரை ஓட்டும்பாகன்)<br>இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| பொன்வளையல் | – | (பொன்னால் செய்த வளையல்)<br>மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| தலைவலி மருந்து | – | (தலைவலிக்குத் தரும் மருந்து)<br>நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| குழாய்த்தண்ணீர் | – | (குழாயிலிருந்து கிடைக்கும் தண்ணீர்)<br>ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க |

தேர்ப்பாகன் – (தேரை ஓட்டும்பாகன்)
தொகை
காட்டுப் புலி – (காட்டின்கண் வாழும் புலி)
ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
(ஆறாம் வேற்றுமைத் தொகையில் பயன்தரும் சொல் மறைந்து வருதலில்லை)

- **வினைத்தொகை**

"காலம் கரந்த பெயரெச்சம் **வினைத்தொகை**யாகும்"

**குடிநீர், விரிகடல்**

குடி, விரி என்பவை வினைப்பகுதிகள், இவை முறையே நீர், கடல் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து பெயரெச்சங்களாயின. மேலும் இவை குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர் எனவும், விரிந்தகடல், விரிகின்ற கடல், விரியும் கடல் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன. காலங்காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சங்களில் தொக்கி இருக்கின்றன.

குறிப்பு : வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே வினைத்தொகை அமையும்.

- **பண்புத்தொகை**

செங்காந்தள் – செம்மையாகிய காந்தள்
வட்டக்கல் – வட்டமானகல்
இன்சொல் – இனிமையான சொல்

நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப் பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'மை' என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது **பண்புத்தொகை** எனப்படும்.

இத்தொடர்களிலுள்ள செம்மை, வட்டம், இனிமை என்பன பண்புப் பெயர்கள், காந்தள், கல், சொல் என்னும் பெயர்களைத் தழுவி நிற்கின்றன. இவ்விரண்டிற்குமிடையில் ஆகிய, ஆன என்னும் பண்புருபுகள் தொக்கி வந்துள்ளன. அவற்றுடன் 'மை' என்னும் பண்பின் விகுதியும் மறைந்து வந்துள்ளன.

- ## இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று, இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது **இரு பெயரொட்டுப் பண்புத்தொகை** எனப்படும்.

சாரைப்பாம்பு, மார்கழித் திங்கள்

பாம்பு, திங்கள் என்பது பொதுப்பெயர், சாரை, மார்கழி என்பது சிறப்புப் பெயர்.

- ## உவமைத்தொகை

உவமைக்கும் பொருளுக்கும் இடையில் போல், போன்ற, நிகர, அன்ன என்னும் உவம உருபுகளுள் ஒன்று தொக்கி நிற்க வரும் தொடர் **உவமைத்தொகை** எனப்படும்.

முத்துப்பல்

இத்தொடர் முத்துப் போன்ற பல் எனப் பொருள் தருகிறது. முத்து – உவமை, பல் – உவமிக்கப்படும் பொருள் (உவமேயம்). இவ்விரண்டிற்குமிடையே 'போன்ற' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

- ## உம்மைத் தொகை

இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகையாகும்.

அண்ணன் தம்பி
ஆடு மாடு
தாய் தந்தை

இத்தொடர்கள் முறையே அண்ணனும் தம்பியும், ஆடும் மாடும், தாயும் தந்தையும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

உம்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும்.

- **அன்மொழித் தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை தொகைநிலைத்தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது **அன்மொழித்தொகை** எனப்படும்

பூங்குழல் வந்தாள்

இத்தொடரில் முதலில் உள்ள 'பூங்குழல்' என்னும் சொல் 'பூவை அணிந்த கூந்தல்' என்னும் பொருளைத் தரும் இரண்டாம் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தெகையாகும். இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச் சொல்லைத் தழுவி நிற்பதால், பூவை அணிந்த கூந்தலை உடைய பெண் வந்தாள் எனப் பொருள் பெறப்படுகிறது. 'உடைய பெண்' என்பது இத்தொடரில் இல்லாத மொழியாகும். இவ்வாறு வேற்றுமைத் தொகையை அடுத்து அல்லாத மொழி தொக்கி நிற்பதால் இத்தொடர் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

### 2.4.2 தொகா நிலைத் தொடர்கள்

ஒரு தொடரில் சொற்களுக்கு இடையில் சொல்லோ உருபோ மறைந்து வராமல் வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவது **தொகாநிலைத் தொடர்** எனப்படும்.

**(எ.கா)**

மழை பெய்தது
மயில் ஆடியது

முதல் தொடரில் 'மழை' என்னும் எழுவாயும் 'பெய்தது' எனும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறு சொல் வேண்டாது பொருள் உணர்த்துகின்றன.

அதேபோன்று இரண்டாவது தொடரிலும் எழுவாயும், பயனிலையும் தொடர்ந்து நின்று மயில் ஆடியது என்னும் பொருளைத் தருகின்றன.

தொகாநிலைத் தொடர் 9 வகைப்படும்.

கந்தன் எழுதினான் – இதில் கந்தன் என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'எழுதினான்' என்னும் பயனிலை அமைந்துள்ளது. இதனை **எழுவாய்த்தொடர்** என்பர்.

கந்தன் எழுதினான் – இதில் கந்தன் என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'எழுதினான்' என்னும் பயனிலை அமைந்துள்ளது. இதனை **எழுவாய்த்தொடர்** என்பர்.

மழையே வா ! – இத்தொடர் மழையை விளிப்பதால் (அழைப்பதால்) விளித்தொடர் எனப்படும்.

வந்தார் அமைச்சர் – இதில் வினை முற்று முதலில் நின்று பெயர்ச்சொல் இரண்டாவதாக வந்துள்ளது. இதற்கு **வினை முற்றுத் தொடர்** என்று பெயர்

தெரிந்த இடம் – இதில் தெரிந்த எனும் எச்சவினை இடம் என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்துள்ளதால் இது **பெயரெச்சத் தொடர்** எனப்படும்

கூடி மகிழ்ந்தனர் – இத்தொடரில் 'கூடி' என்னும் எச்சவினை மகிழ்ந்தனர் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இதனை **வினையெச்சத் தொடர்** என்பர்

பாடத்தைப் படித்தாள் – இத்தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக நின்று பொருளை உணர்த்துகிறது. இது **வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்** எனப்படும். (வேற்றுமைத்தொடர்)

மற்றொன்று – மற்று + ஒன்று – இதில் மற்று என்னும் இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் நின்று பொருள் தருவதால் இதனை **இடைச்சொல் தொடர்** என்பர்.

கடிமணம் – கடி என்பது உரிச்சொல். இதைத் தொடர்ந்து மணம் என்னும் சொல் வந்துள்ளது. இது **உரிச்சொல் தொடர்** எனப்படும்.

பாம்பு ! பாம்பு ! பாம்பு ! – ஒரே சொல் அச்சத்தின் காரணமாகப் பலமுறை அடுக்கி வந்துள்ளது. இஃது **அடுக்குத் தொடர்** என வழங்கப்படும்.

இவ்வாறாகத் தொகாநிலைத்தொடர் **எழுவாய்த்தொடர், விளித்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், வேற்றுமைத் தொகா நிலைத்தொடர், இடைச்சொல்தொடர், உரிச்சொல்தொடர், அடுக்குத்தொடர்** என ஒன்பது வகைப்படும்.

## 2.5 துணைவினைகளும் கூட்டு வினைகளும்

### துணைவினைகளும் கூட்டு வினைகளும்

முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை துணைவினை ஆகும். வினைச்சொல்லானது பல கூறுகளாகப் பிரிந்து பொருள் தரக்கூடியவாறு அமையும் வினை கூட்டுவினை ஆகும்.

### 2.5.1 துணைவினைகள்

வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பல வகையாகப் பிரிக்கலாம்.

வினைச்சொற்கள் என்பது தொழில் அல்லது செயலைக் குறிக்கும். இவை காலம் காட்டும் இடைநிலைகளையும் பால், எண் காட்டும் விகுதிகளையும் பெற்று வரும். ஒவ்வொரு வினைச்சொல்லுக்கும் தனித்தனியே சொற்பொருள் உண்டு.

எ.கா.

**பார்** என்னும் வினைச்சொல் **பார்த்தல்** அல்லது **காணுதல்** என்ற தனிப்பொருளைத் தரும். இது போன்றே **இரு, பாடு, ஆடு, செய், அழு, தள்ளு** போன்ற வினைச் சொற்களும் தமக்கென்று தனித்தனிப் பொருளைத் தரும்.

முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும். துணைவினை என்பது இன்னொரு வினையுடன் சேர்ந்து வருகின்ற நிலையில் தன் பொருளை இழந்து சேர்ந்துவரும் வினைக்குப் புதிய பொருளைத்தரும் வினைச்சொல் ஆகும்.

தமிழில் **இரு** என்பது தனியே வரும்போது **இருத்தல்** எனும் பொருளைத் தருகிறது. அதுவே **போ, வா, செய், படு** போன்ற வினைகளுடன் சேரும்போது **போயிருந்தான், வந்திருந்தான், செய்திருந்தான், படுத்திருந்தான்** என்றாகிறது. இங்கு **இரு** என்பது துணைவினைப் பொருளைத் தருகிறது.

தமிழில் துணை வினை, தலைமை வினைக்குப் பிறகு வருகின்றது. தலைமை வினைகள் எப்போதும் போய், வந்து, செய்து, படுத்து போன்ற வினையெச்ச வடிவிலேயே வருகின்றன. துணைவினை படுத்திரு, செய்துவிடு என்பவற்றில் வருவதுபோல் ஏவல் வினையாக அல்லது போயிருந்தான்,

வந்துவிட்டான் என்பவற்றில் உள்ளதுபோல் முற்றுவினை வடிவத்தில் வருகின்றது.

தற்காலத் தமிழில் **விடு, அடி, அருள், அழு, ஆயிற்று, இடு, இரு, எடு, ஒழி, கட்டு, கிட, கிழி, கூடு, கொடு, கொள், தள்ளு, தீர், தொலை, நில், படு, பண்ணு, பார், பிடி, போ, போக, போடு, மாட்டு, முடி, வா, வாங்கு, வேண்டு, வை** போன்ற நாற்பதிற்கும் மேற்பட்ட வினைகள் துணைவினைகளாக வழங்குகின்றன. இத்துணைவினைகள் **முயற்சி, பலன் அளிக்காமை, உறுதி, துணிவு, முடிவு, மிகுதி, காரணம், கண்டிப்பு, வெறுப்பு, கோபம், சிறப்பு** போன்ற பல்வேறு பொருள்களை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களை உணர்த்தும் வகையிலும் சில துணைவினைகள் அமைந்துள்ளன.

**விடு**

இத்துணைவினை உறுதிப்பொருளைத் தருகிறது.

**எழுதிவிடு**

இதற்குப் பொருள் **எழுது** என்பதாகும். ஆனால் **எழுது** என்பதில் இல்லாத உறுதிப்பொருள் **எழுதிவிடு** என்பதில் உள்ளது. **விடு** என்ற துணைவினையே அப்பொருளைத் தருகிறது. அதேபோல **எழுதினேன், எழுதுகிறேன், எழுதுவேன்** என்ற வினைச்சொற்களில் இல்லாத உறுதிப்பொருள், அவ்வினைச்சொற்களோடு விடு என்ற துணைவினையைச் சேர்த்து முறையே **எழுதிவிட்டேன், எழுதிவிடுகிறேன், எழுதிவிடுவேன்** என்று கூறும்போது இருப்பதைக் காணலாம். ஆக, **விடு** என்னும் துணைவினைக் **கட்டாயம்** (அல்லது) **கண்டிப்பு** என்ற பொருளைத் தருவதாகவும் வழங்குகிறது.

- **துணை வினைகளின் பண்புகள்**

    - துணை வினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன.
    - இவை முதல்வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு வலு சேர்க்கின்றன.
    - பேச்சுமொழியில் துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

### 2.5.2 தனிவினையும் கூட்டுவினையும்

வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம்.

- **தனி வினை**
- **கூட்டு வினை**

- **தனிவினை**

ஒரு வினைச் சொல்லைப் பொருள் தரக்கூடிய பல கூறுகளாகப் பிரிக்க முடியாத போது அது தனி வினை எனப்படும்.

**எ.கா.**

- நில்
- நின்றான்
- நிற்கிறார்கள்

மேலுள்ள சொற்களில் **நில்** என்ற சொல் வினையடியாகும். இச்சொல்லை பொருள் தரக்கூடிய வகையில் மேலும் பிரிக்க முடியாது. அதே போல் **நின்றான், நிற்கிறார்கள்** போன்ற வினைச் சொற்களும் **நில்** என்ற வினை அடியோடு பல ஒட்டுக்கள் சேர்ந்து உருவாக்கம் பெற்றுள்ளன.

நில் + ற் + ஆன்
நில் + கிறு + ஆர்கள்

இவற்றுள் நிலை என்ற வினை அடியைத் தவிர்த்து ஏனையவை அனைத்தும் ஒட்டுக்கள் எனப்படும். இந்த ஒட்டுக்கள் தனித்து நின்று பொருள் உணர்த்துவது இல்லை. இலக்கணப்பொருளை மட்டுமே உணர்த்தும். ஆகவே, இவ்வாறு பல கூறுகளாகப் பொருள் தரக்கூடிய வகையில் பிரித்து நோக்க முடியாத வினைச்சொற்கள் தனி வினைகள் எனப்படும்.

- **கூட்டுவினை**

ஒரு வினைச்சொல்லானது பொருள் தரக்கூடியவாறு பல கூறுகளாகப் பிரிகின்ற போது அது கூட்டுவினை எனப்படும். இங்கு இரு சொல் கூட்டு சேர்ந்து ஒரு வினைச்சொல்லாக செயற்படும். பிரித்தால் இரண்டும் இரு வேறு பொருளைத் தருவனவாகவும் அமையும்.

**எ.கா.**

**தந்தியடி**
**கைப்பிடி**
**தட்டிக்கேள்**

மேலே உள்ள சொற்களைத் தந்தி + அடி, கை + பிடி, தட்டி + கேள் என்றவாறு பிரித்து நோக்க முடியும். இவ்வாறு பிரிகையில் **தந்தி** என்பது பெயர்ச் சொல்லாகவும் **அடி** என்பது வினைச்சொல்லாகவும் இருவேறு பொருளை உணர்த்துகின்றன. **கைப்பிடி** என்ற சொல்லில் **கை** என்பது பெயர்ச்சொல்லாகவும் **பிடி** என்பது வினைச்சொல்லாகவும் அமைந்து காணப்படுகின்றது. அதேபோல் **தட்டிக்கேள்** என்ற வினைச்சொல் **தட்டி** என்ற வினையையும் **கேள்** என்ற வினையையும் உணர்த்துகின்றது.

## 2.6 தொகுப்புரை

இவ்வலகில், நால்வகைச்சொற்கள், வேற்றுமை உருபுகள், பகுபதம், பகாப்பதம், தொடர்வகைகள், துணைவினைகள், கூட்டுவினைகள் ஆகியவை தக்க சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் பணியில் ஈடுபடும் மாணவ ஆசிரியருக்கு இவ்விலக்கணப்பகுதிகள் பெரும் துணைபுரியும். அவர்கள் தமிழ் இலக்கண அறிவை வளர்த்துக்கொள்ளவும் உதவும்.

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |
|---|
| 1. பதம் என்றால் என்ன? |
| 2. பதம் எத்தனை வகைப்படும்? அவையாவை? |
| 3. பகுபதத்தின் உறுப்புகள் யாவை? சான்று தருக. |
| 4. பகாபதத்தின் வகைகள் யாவை? |
| 5. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன? |
| 6. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? |
| 7. துணைவினைகளின் பண்புகள் யாவை? |